சைவ பரிபாலன சபை வெளியீடு.
ஆரம்பம்: விரோதி ஞ (1889) ஆவணி மீ 28-ம் உ

உ
சிவமயம்

செய்தித்தாளாகப் பதிவு பெற்றது

# இந்து சாதனம்

RECEIVED 1980-10-07 Periodicals Division Library

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40

புத் - 92 ] யாழ்ப்பாணம்:- ரௌத்திரி ஞு கார்த்திகைமீ 19 - 12 - 80 வெள்ளிக்கிழமை [ இல 26

## நாவலர் பெருமானின் கஞ்சித்தொட்டித் தருமமும் விவசாயத் திட்டமும்

[ இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ]

இப்பொழுதைய பஞ்ச நிலைமை நோக்கும்போது இற்றைக்கு நூறு வருடத்துக்கு முன் நிகழ்ந்ததொரு பொல்லாத பஞ்ச நிலை நினைவுக்கு வருகின்றது.

1876 ம் ஆண்டு, மழையே இல்லை. நெல் விதைப்பு வீண் விரயமாயிற்று; அடுத்த வருட விதைப்புக்கு விதை நெல்லின்றி விவசாயிகள் ஏங்கினார்கள். அரசாங்கம் விதை நெல் உதவ முன் வந்தும் விவசாயிகளுக்குப் பயன்படவில்லை. ஏழைகள் அரிசியைக் கண்ணாற் காணவும் முடியாமல் தவித்தார்கள். இக்கால 'மா' அக்காலத்தில் இல்லை.

ஒரு ஆறுமுகநாவலர் துடிதுடித்தார். ஆங்காங்கு கஞ்சித் தொட்டிகள் அமைத்து ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்து வந்தார் நாவலர் பெருமான். அவர் தொடங்கிய கஞ்சித் தொட்டித் தருமத்துக்குச் செல்வர்கள் பலர் உதவ முன்வந்தார்கள். கஞ்சித் தொட்டித் தருமம் நாடு செழிக்[illegible] சதத்துக்கும் கணக்குக் காட்டப்பட்டது. ஏழைகளின் வயிற்றுக் கொதி தணிந்தது. அதே சமயத்தில் விவசாயிகள் வஞ்சிக்கப்பட்டதை நினைந்து, நாவலர் பெருமானின் நெஞ்சம் கொதித்துக்கொண்டேயிருந்தது. இக் கொதிப்பைச் சட்ட சபையில் எடுத்துக் காட்டிப் பெரு முழக்கஞ் செய்தார் சேர். முத்துக் குமாரசாமி என்பது ஈண்டுக் குறிப்பிடற்பாலது. பஞ்சத்துக்கும் விவசாயத்துக்கும் நிவாரணம் காணும் வகையில், மட்டக்களப்பை நிலைக்களனாக வைத்து விவசாய விருத்திக்குப் பாரியதொரு திட்டம் வகுத்தார் நாவலர் பெருமான். ஸ்திரமான நல்லதொரு சபை நிறுவ ஆயத்தம் செய்யப்பட்டது.

நாவலர் பெருமான் விவசாயத் திட்டம் வகுப்பதனை அறிந்தது இந் நாட்டிற் பரவியிருந்த வெள்ளை முதலாளி வருக்கம்; இப்படியான முயற்சியில் நாவலர் பெருமான் ஈடுபடுவதை அவ் வருக்கம் விரும்பவில்லை. அரசாங்க மூலம் நாவலர் பெருமான் எடுத்த விவசாயத் திட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது அந்த முதலாளி வருக்கம். பாதிரிமார் நாவலரின் சைவ சமயத் திட்டங்களுக்கு அஞ்சியது போல, நாவலர்பெருமானின் விவசாயத் திட்டத்துக்கு அஞ்சிவிட்டது அந்த முதலாளி வெள்ளை வருக்கம்,

இவ் விஷயத்தைச் சாங்கோபாங்கமாக ஆராய்ந்து அக்காலப் பத்திரிகைகளையும், நாவலர் பெருமான் வெளியிட்ட,

'வெகுசனத் துரோகம்' முதலிய துண்டுப் பிரசுரங்களையும் படித்து,

ஒரு புத்தகம் வெளியிட ஆயத்தமாயிருந்தார் அமரர் பேராசிரியர் கலாநிதி தனஞ் செயராசசிங்கம். கலாநிதியின் திடீர் மறைவு துரதிஷ்டம்,

x x x x

இப்பொழுதைய பஞ்ச நிலையையும், நடுத்தர வகுப்பினர்கூடப் படும் கஷ்டத்தையும், நாவலர்பெருமான் கண்டால் என்ன செய்வார் என்பதை நாமெல்லாம் சிந்திக்க வேண்டிய நிலை நேர்ந்திருக்கிறது. சிந்தித்து இயன்றது செய்வது நாவலர் பெருமானின் ஆத்மசாந்திக்குச் சாந்தி செய்வதாயிருக்கும் என்று தோன்றுகின்றது. அவ்வாறு செய்யும் சாந்தியே நாவலர்பெருமானுக்குச் செய்யும் நல்ல குருபூசையாயும் அமையலாம்

நாவலர் பெருமானின் ஆத்ம சாந்தியையும், அப் பெருமானின் நல்லாசியையும் வேண்டித் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

## சமத்துவ வழிபாட்டுரிமை

இந்து கலாசார அமைச்சு வற்புறுத்து

பெரியபுராணத்து நாயன்மார் வரலாறுகள் — தொல்காப்பியத் திணைப் பாகுபாடு — ஔவைப் பிராட்டியின் 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' ஆன இரு சாதிப் பாகுபாடு — ஈழத்தின் பிரபல இந்துத் தலங்களான திருக்கோணேஸ்வரம், கேதீஸ்வரம், கதிர்காமம், நல்லூர், சந்நிதி, முன்னீஸ்வரம் முதலிய ஆலயங்களின் சமத்துவ முன்மாதிரி — சாதியிலும் சமயமே சிறந்தது என்ற சமயவாதி நாவலர்பெருமானின் இலட்சியம், — சமத்துவ வழிபாட்டுரிமை மறுத்தல் சட்ட விரோதம் [illegible] உயர் நீதி மன்றத்[illegible] — அனைத்துலக மனித உரிமைகள் சட்ட மூலப்படியும் இந்து சமயக் கோட்பாட்டின்படியும் சாதிப் பாகுபாடு நியாயமற்றதென்ற விசேட குழுவின் ஆய்வுமுடிபறிக்கை — இவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்துமதத்தலைவர்கள் உயர்நீதி மன்ற நீதிபதிகள் பிறநாட்டுத் தானிகர்கள் முன்னிலையில் நடைபெற்ற மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படியும் ந்ருவெம்பா வைத்தினத்திலிருந்து ஈழத்தின் இந்துக்கோயில்கள் அனைத்தும் சமத்துவ வழிபாட்டு நிலையங்களாகச் செயல்படவேண்டும் என்று அரசாங்கம் இட்ட ஆணையை இந்துக் கலாசார அமைச்சு கொள்கைச் சுற்றறிக்கை என்ற தோரணையில் சகல இந்துக்கோயில்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

## இந்து சமய நாடகப் போட்டி

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆட்சிக் குழுக் கூட்டம் அண்மையில் திருநெல்வேலியில் நடைபெற்றது. அடுத்த ஆண்டின் முற்பகுதியில் இந்து சமய நாடக எழுத்துப் போட்டி ஒன்று நடாத்தவும், முதல் மூன்றிடங்களுக்குப் பரிசில் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. விபரம் வேண்டுவோர் திரு. இ. சுவாமிநாதன் யாழ். மா. இ. இ. பேரவை, திருநெல்வேலி, அல்லது, திரு. வி. யோகீஸ்வரன், இ. இ. மன்றம், பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

## அல்வாயூர்க் "கடவுள் சுவாமிகள்"

—o—

( முருகனடிப் பொடி )

ஈழ நன்னாட்டின் தெய்வீகப் பொலிவுக்கும் ஆத்மானந்தப் பரிமளிப்புக்கும் ஊட்டந் தரும் வகையில் காலத்துக்குக் காலம் ஆத்ம ஞானிகள் தவசிரேஷ்டர்கள் மகான்கள் தோன்றியிருந்து இறைபணிகளைப் பரப்பி பக்திமணங் கமழ்வித்து வந்துள்ளார்கள். இம் மாதவத்தோர் வரிசையில் இடம்பெறும் கடையிற் சுவாமிகள் அவர்தம் பிரதான சிஷ்யர் செல்லப்பாச் சுவாமிகள் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள், மறவன்புலம் குருநாதர் சுவாமிகள், கோண்டாவில் கந்தையாச்சுவாமிகள் (குடைச் சுவாமி) இணுவை வடிவேற் சுவாமிகள் ஆகியோர் போன்ற ஒருவர் 'கடவுள் சுவாமிகள்' என வழங்கப்பெற்ற — வணங்கப்பெற்ற அல்வாயூர் முருகுப்பிள்ளைச் சுவாமிகள், அண்மையில் அரனடி அடைந்த சம்பவம் அவர்தம் நூற்றுக்கணக்கான சீடர்களின் மனங்களுக்கு வேதனையாகவும் சோதனையாகவும் அமைந்ததெனலாம். செல்வச் சந்நிதி ஆலய தகர மடம் இவர்தம் தவச்சாலையாக விளங்கிற்று.

"[illegible] நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்ற நாவலர் பெருமான் நன்மொழியையே உயிர் இலட்சியமாகக் கொண்டு, தமது குருவான மறவன்புலம் குருநாதர் சுவாமிகளின் குருத்துவத்தைப் பேணிப் போற்றி, செல்வந்தர்களின் பணத்தைச் சேமித்து வைக்கும் இடம் ஏழைகளின் வயிறு என்ற தத்துவத்தைப் பணம் படைத்தோர் போற்றிக் கைக்கொள்ளத் தூண்டுதலாக விளங்கிய கடவுள் சுவாமிகள், இறை தியானம் மௌன விரதம், முருக பூசனை முதலிய சாதனைகள் மூலம் தம்மிடம் இறை ஒளி பிரகாசிக்கப் பெற்றவர். அதுபோன்று 'உலக சுகங்கள் இன்பம்போலக் காட்டித் துன்ப

(வளர்ச்சி 2 ம் பக்கம்)

## ஞானப் பயிர்

[ ஆசிரியர் செ சின்னத்துரை, ஏழாலை ]

"மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்தி
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டு
செம்மையுள் நிற்பராயிற் சிவகதி விளையுமன்றே".

( திருநாவுக்கரசு சுவாமிகள் )

உள்ளதிலேயிருந்துதான் உள்ளது தோன்றும். ஆகையால் உள்ளத்தில் உண்மை நிலவவேண்டும். கள்ளம் கபடம் நீங்க வேண்டும் நினைப்பது பேசுவது ஆகிய எல்லாவற்றிலும் ஒரு தனித்துவமான நேர்மை வேண்டும். உள் ஒன்று வைத்துப் புறம்பு ஒன்று பேசலாகாது. ஆற்றொட்டம்போல அன்பு எமக்கு வேண்டும். அந்த விருப்பமாகிய வித்தை உள்ளத்தில் விதைக்க வேண்டும். பொருமை லோபம், மோகம், மதம் முதலிய அசுரகுணங்களைத் திருவருட்டுணை கொண்டு களைய வேண்டும். திருவருளே எமது எண்ணங்களைச் செயல்களை இயக்குகிற உயிர்களில் மறைந்து அவற்றினை நடாத்துகிற நாடக ஆசிரியன்; இந்த உண்மையில் தெளிவும் உறுதியும் எமக்கு வேண்டும். பொறுமையும் அமைதியும் மனதில் நிலவ வேணடும். நான் உடலல்ல என்றும் ஆணவமலத்தைத் தேயப் பண்ணித் தம்மோடு சேர்த்து வைக்கத் தரப்பட்ட ஒரு பொம்மை உடம்பு என்றஉணர்வு

(வளர்ச்சி 5 ம் பக்கம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ரௌத்திரி ஸ்ரீ கார்த்திகை மீ
19 - 12 - 80 வெள்ளி


## சங்கநாதத்துடன் திருவாசகம் ஓதும் வழக்கம்

இக்கப்பொழுதில்லை
எங்கே மறைந்து விட்டது!

அக்காலத்திலே திருவெம்பாவை விழா வேளையில், அதிகாலையிற் சங்கு கொண்டு நாதமெழுப்பி அடியார்களைத் துயில் எழுப்பிவந்த சிறந்த முறையைப், பொழுதுக்கு முன் பூவெடுத்து மாலையும் சரமும் தொடுக்கும் தொண்டர்கள் நெறியாக ஆற்றி வந்தனர். திருப்பள்ளி யெழுச்சி திருவெம்பாவைப் பாக்களை வீதி தோறும் ஓதியவண்ணம் சங்கொலி பரப்பி வந்த சிவனடியார்கள் இக்காலத்தில் ஏன் அவ்வாறு திருத்தொண்டாற்ற எண்ணாதிருக்கின்றனர் என்பதை என்னென்று சொல்வது.

பொழுது புலர்ந்ததென்றும், அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய் அகன்றதென்றும், இடித்துரைத்தும்; அவ்வளவன்று, கூவின கோழ் கூவின பூங்குயில், குருகுகளும் இயம்பின என்று தொடுத்துரைத்தும்; அப்பட்டோ, காலைச் சங்கு நாதமும் சால வெழுந்ததென்றும் கூறினும்; யார்தான் துயில் நீக்காதவர்வர்.

திருப்பள்ளி எழுச்சியின் தத்துவப் பொருள் சிவனவனைத் தலைவனாகவும் அவனை அடைய அவாவு அடியார்கள் தலைவியர்களாகவும் ஐந்திணைப்பொருளில் முன்னவனைப் பின்னையோர் துயில் நீக்கச் சொல்லித் துதித்தல் ஆகும்.

திணைப் பொருள் திட்டாது சொற்களின் நேரிய கருத்தினை மட்டும் அறியும் ஆற்றல்மட்டும் உள்ளவர்களது உள்ளத்தை இப்பாடல்கள், உணர வைத்து உகுவித்து உடனெழுந்து ஈசன கோயில்விழாக் காண வைக்கும் பெற்றியன.

மணி மணியாக அணி அணியாகத் தீஞ் சொல் வளம் தேன் சுவை சொட்டத் திகழும் இப் பாக்களை ஓதுந் தொறும் செந்தமிழ் இன்பம் எழுந்து உந்த வைக்கின்ற அனுபவம் பெற்ற அடியார் ஒருவர் திருவாசகம் என்னும் தேனென்று பொருள் பொலியப் பாட்டமைத்த பெற்றியே பெற்றி.

"விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருள்
மண்ணகத்தே வந்து" மாணிக்கவாசகப் பெருந்தகையை "வாழச்செய்தானே"! இத்தகையோர் தாம் எங்கள் சமயகுரவர்கள் என்பது பெற்றும்

மார்கழித் திங்கள் என்றதும் திருவாதவூரடிகளின் சீர் அதிற்படிந்திருப்பதைச் சைவாலயங்களில் நிகழும் நியமங்கள் எடுத்துக் காட்டிய வண்ணம் இருக்கும்

மாணிக்கவாசகப் பெருந்தகை திருவாசகத் திருமுறையைப் பாடிய பொழுது, இதன் சுவை தேனினுமினிமையாக மக்கள் நாவிலும் செவியிலும் உள்ளத்திலும் தெவிட்டிக்கொண்டு பாராயணத்துக்குரிய பண்பால் என்ஞான்றும் நிலவும் என எண்ணியிருக்க மாட்டார். சைவ மக்கள் புறமதப் போலி உரைகளால் அவமே போகாமே சமய குரவர்கள் திருத்தொண்டாற்றி வந்த பயனுலன்றோ இன்று சைவம என்று ஒன்று தலைமையுடன் சாலச் சிறந்து விளங்குகின்றது!

திருவெம்பாவைப் பெருநாட்களிலே இப்பாடல்களை எடுத்து மீண்டும் மீண்டும் ஓதிவருங்கால் இறைவனை இப்படியாக எண்ணுங்கள் என்று திருவாதவூரடிகள் கூவியழைத்துக் கூறியது போல உள்ளத்தில் உணர்ச்சி உண்டாகின்றது.

சொல்லின் சுவையிற் பொருளின் பொலிவு

அருட்பெரும் சோதி, ஆதியும் அந்தமும் இல்லாதது, பரஞ்சோதி, சிவலோகன்; தில்லைச்சிற்றம்பலத்துள் ஈசன், அத்தன், ஆனந்தன், அமுதன், விண்ணுக்கொரு மருந்து, வேதவிழுப்பொருள், கண்ணுக்கினியான், மால் அறியா, நான்முகன் காணமலை, ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான், பல அமரர் உன்னற்கரியான், ஒருவன், இருஞ்சீரான், ஊழி முதல்வனாய் நின்ற ஒருவன், ஏழை பங்காளன், முன்னைப் பழம்பொருள், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியன்.

இவ்வாறெல்லாம் சொல்லி இன்புற்ற மணிவாசகர் திருவெம்பாவைப் பத்தாம பாட்டில் இன்னும் மேலாகச் சைவ சித்தாந்த அருங்கருத்துக்களை அணிவகுத் தமைத்திருப்பதை அறிந்திறைஞ்சுவோம்.

பாதாளம் ஏழினுங் கீழ்
சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும்
எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால்
திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும்
மண்ணும் துதித்தலும்

## முன்னோர் சொன்னதை முற்றாக மறந்துவிடுகிறோம்

இவ்விதழில் இன்னோரிடத்திலே இலக்கிய கலாநிதி பண்டிதமணியவர்கள், நாவலர் நாமத்தைமட்டும் நாகணவாய்ப் புள் பேசுவது போலச் சொல்லிக்கொண்டு அப்பெருந்தகை யார் போதித்தனவற்றைச் செயற்படுத்தாமற் காலத்தை அவமே கழிக்கின்றவர்களுக்குச் சுட்டிப்பான சூடு போட்டிருக்கின்றனர்.

இலக்கிய கலாநிதி குறிப்பாக எடுத்துக் கொண்ட நாவலர் திட்டத்தை அப்படி ஒன்று இருந்ததென்று கூட எண்ணாதுவிட்ட பேதையர் நாம்.

விவசாயம் என்றால் அது ஒருகுறிப்பிட்டவர்களுக்கே உரியதென்றும் பெரும் வரிசையாக வாழ்வோருக்கு அவமதிப்பானதெனவும பலர் எண்ணுவது உண்மையே.

வள்ளல் இராமநாதன் அவர்கள் வகித்து வந்த அதி உன்னத நிலைமையிலும் கூட விவசாயத்தை நாடி அரும் பாடுபட்டுப் பரந்தன் பிரதேசத்தில நுளம்புக் கூட்டத்தின் விருந்தினராகிக் காட்டு வெப்பக் காய்ச்சலுக்கும அஞ்சாது எடுத்த முயற்சியைத்தானும் நாம சிந்திப்பதில்லை.

இராமநாத தருமம் ஏராளமான வயல் நிலங்களின் பயனை அடக்கியுள்ளது, இருபெருங்கல்லூரிகளுக்கும் இரு சிவாலயங்களுக்கும் அழுது குறையாத அளவுக்குஅளிக்கவல்லது. இத் தருமம் வற்றாப் பொய்கை.

நாவலர்பெருமான் சிதம்பரத்திலே, சிவபுரி வயல்நிலவளம், அங்கமைந்த நாவலர் உயர்நிலைப்பள்ளிக்கும் சேக்கிழார் கோயிலுக்கும் ஆதாரமாயுள்ளது.

சைவபரிபாலன சபையார் மறவன்புலோவில் ஓரளவு விவசாயத்தை ஊக்குவிக்கின்றனர்; எனினும் அம்முயற்சிக்கும் முட்டுக்கட்டை போடுகின்றவர்களும் இருக்கின்றார்கள்

பண்டிதமணி பரிந்துரைத்த பண்பு மதிமொழியை நாவலர் பெயரால் பணியாற்ற முன்வந்திருப்போர்கள் ஊன்றி உணர்ந்து செய்யப்பட வேண்டியவற்றைச் செய்யச் சிந்தித்துச் செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

ஒவ்வொரு சங்கமும் ஒவ்வொரு பள்ளிக்கூடமும் பயிர்ச் செய்கைக்கு வழி வகுத்து வியர்வை சிந்த உழைப்பார்களேயானால பஞ்சம் வந்த காலத்தும் மக்களுக்குச் சற்றுத் தஞ்சம் அளிக்க முடியுமல்லவா?

விருந்தோம்பல் சைவ வாழ்வுப் பண்பு; இதற்கும் விவசாயம் வேண்டுமல்லவா? திருக்கோயில்கள் திகழ்வதற்கும் கிருஷிகம் தேவையல்லவா? இவற்றுக்கெல்லாம் மேலாக இறைவனை ஏத்துவதற்கு ஏற்ற உடம்பு நிலையிருந்தாற்றானே உயிர்ப்புப உளதாகும். பண்டிதமணி புகட்டிய பாடத்தைப் படித்துப் பயனடைவோமாக.

ஒத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்து அரன்றன்
கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர்
ஆர்உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும்
பரிசேலோர் எம்பாவாய்

அரும்பொருள் விரிக்கும் இப்பாடல், முன் அமைந்த ஒன்பது திருவெம்பாவைப் பாடல்களில் ஈசனை வியந்து இயம்பியவற்றைக் கேட்டானந்திக்கும் அடியார், அப் பரம்பொருளை அடைவது சாலச் சிறந்ததென்றுணர்ந்து அவ்வழி அவனைப் பற்றி மேலும் அடையாளம் காண அவற்றை இவர்கள் அறிந்திருப்பார் ஆகையால் இவர்களிடம் கேட்போமெனக் கோயிற் பிணாப் பிள்ளைகளிடத்தே அறிந்துகொள்ள அவாவினர் என்பதாயமைந்திருப்பது இனிது புலப்படுகின்றது. இங்கிதமான இப் பாடல்களைச் சங்கநாதம் செய்வோம்.

ஓ
## சந்தாதாரச் சிவசீலர்களே!

கடந்த 92 ஆண்டுகளாகச் சிவசிந்தை பரப்பிவரும் இந்துசாதனத்தின் ஆதரவாளர்களாகிய தங்கள் இடையறாத ஆதரவை மேலும் நீடித்துச் சிவப்பணி புரிய வேண்டுகின்றோம்.

சந்தாதாரர்களில் பலர் இன்னமும் 1980 ஆம் ஆண்டிற்கான சந்தாப்பணம் செலுத்தவில்லை.

தயைகூர்ந்து இந்துசாதனத்தின் சிவதொண்டு தடைப்படாவண்ணம் காத்தற்பொருட்டு கடனாயாக இவ்வாண்டுச் சந்தாப் பணம் 25/- ரூபாவை அனுப்பியுதவக் கோருகிறோம்.

## அல்வாயூர்க் "கடவுள் சுவாமிகள்"

1 - ம் பக்கத்து வளர்ச்சி

ம்மா மாறக் கூடியவை" குரு பக்தியும் குரு சேவையும் பிறவிப் பெருங்கடலைக் கடக்க உதவும் இரண்டு தடுப்புக்கள்" "நீ தெய்வத்தின் குழந்தை என்பதை உணர்வாயாகில், உன் தந்தையாகிய தெய்வத்தை நீ உணர்வது சுலபம்" "கடவுள் ஒருவரையே பரிபூரணமாக விரும்பு — ஏனெனில் அவர் ஒருவரே பரிபூரணம் — நித்தியப் பொருள்" என்பன போன்ற போதனைகள் மூலமும், தமது ஆசீர்வாதத்தினால் அருள் நோக்கினுல் பலர் இன்னல்கள் ஏக்கங்கள் பிணிகள் தீர்த்ததன் மூலமும் தமக்கென ஒரு சிஷ்யர் குழாமே உருவாக ஏதுவானவர்.

மறவன்புலத்திலுள்ளதும் இவரது பெருமுயற்சி யாலமைந்ததுமான குருநாதர் சுவாமிகள் சமாதியின் அருகே அண்மையில் அரனடி சேர்ந்த இவர் தம் பூதவுடல் இவர் சிஷ்யர்களால் சமாதி வைக்கப்பட்டது.

## இராமநாதன் கல்லூரியில் இராமநாத குருபூசை

என்றும் போல இவ்வாண்டும் இராமநாதன் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள், முன்னாள் அதிபர்கள், மாணவர்கள் பழைய மாணவர்கள் கல்லூரி அபிவிருத்திச்சபையினர் எல்லோரும் இராமநாத குருபூசையை முறைப்படி நன்கு இயற்றினர்.

மாலையிலே கல்லூரிப் பழைய மாணவர்களும் சைவமங்கையர் சபையும் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களும் ஒன்றிணைந்து நிகழ்த்திய பொதுக் கூட்டத்திற்குக் கல்லூரி அதிபர் திருமதி பே. இராசரத்தினம் அவர்கள் தலைமை தாங்கி இராமநாதமகானின் புண்ணிய சேவை என்றென்றும் புகழப்படும் என்றும் விசேடமாக இந்நாட்டுப் பெண்மணிகள் ஒரு பொழுதும் இப்பெரியாரை மறக்கமுடியாதென்றும் கூறினர்.

பட்டத்தரிப்பு மகளிர்கல்லூரி அதிபர் அவர்கள் பேசும்பொழுது தன்னைப் போன்றவர்களின் நிலைமைகளெல்லாம் வழிகாட்டியாக விளங்கிய பொன் இராமநாதப்பெரியாரின் நாள் மிக விசேடமான தென்றும் அப்புண்ணிய சீலரின் போதனைகளை மறவாது செயலாற்ற இக்குரு பூசைத் தினத்தில் அவற்றைப் பற்றி நன்கு அறிவது முக்கியம் என்றும் எடுத்துக்காட்டினர்.

திரு. ந.ம. சிவப்பிரகாசம் அவர்கள் தாம் பரமேசுவராக் கல்லூரிப் பழைய மாணவருள் பாலையில் இக் குருபூசையிற் கலந்து கொள்வது பொருத்தமென்றும் இராமநாத இலட்சியம் தமிழ்மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றும் சொல்லினர்.

கல்லூரி மாணவர்கள் மூவர் இராமநாத வரலாற்றின் முக்கிய அம்சங்களை அமைந்த நல்லநெறியிற் பேச்சுக்களை அளித்தனர்.

## SAIVA SIDDHANTA

(continued from page 4)

10 சங்கல்ப ரஹிதனே, நினைவெல்லாம் கழன்று, சக்தி புவனத்தில் பரானுபூதிமான் எனத் திகழ்பவன்.

10 After the cessation of all traces of thought the freed soul attains the highest state of bliss in the shakti Bhuvana.

"தேன் நிலவிய சிற்றம்பலவனார்
வான் நிலவி இருக்கவும் வைப்பரே"

11 பரமேஸ்வர பாத சம்யுக்தனே பரிபூரணன். அவனே சிவஞானி.

11 Higher than the above bliss is the holy feet of Parameshvara. The perfected soul in advaitic union with the holy feet is a Shivagnani.

"இருபது தோளும் ஒரு விரலால் இறத்த
அழகன் அடிநிழற் கீழதன்றோ என்தன் ஆருயிரே"

12 உடம்போடு பொருந்தி இருக்கும் பொழுது பெறப்படும் சிவஞான முக்தியே, ஜீவன்முக்தி எனப்படும்

12 Shivagnanis are the freed souls who are completely freed here and now.

" அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரிவாய் "

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
ஈட்டு வழக்கு இலக்கம் : 14180

இளையதம்பி கைம்பெண் செல்லம்மா கரணவாய் வடக்கு கரவெட்டி

-எதிராக- வழக்காளி

1. இரசலிங்கம் மயில்வாகனம்
2. பெண் அன்னம்மா கரணவாய் வடக்கு கரவெட்டி
எதிராளிகள்

மேற் குறித்த வழக்கில் தீர்வைப்படியும் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்களை சனவரி மாதம் 28ம் திகதி புதன்கிழமை 1981-ம் ஆண்டு (28.1.1981) காலை 10 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாக விருந்து கன்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

முதலாம் ஆதனம் 10 மணிக்கும் மற்றவைகள் அதன் பின்னுமாக விற்கப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ம் ஆதனத்தின் | மதிப்பிட்ட | விலை | — ரூபா | 3000 | 00 |
| 2 ம் | ,, | ,, | ,, — ரூபா | 1340 | 60 |
| 3 ம் | ,, | ,, | ,, — ரூபா | 500 | 00 |
| 4 ம் | ,, | ,, | ,, — ரூபா | 24,510 | 00 |

ஆதன இடாப்பு

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று

(1) கரணவாய் நவிண்டிற் குறிச்சியிறை "கும்பவாளி" வீடு 1 நிபர. 10 எல்லை கிழக்கு சுப்பையா கைம்பெண் ஆயிலியத்தின் உரிமைக்காரருக்கும் மறுபேறுக்குமுடையவாதனம். வடக்கு 2-ம் எதிராளிக்குடைய வாதனம். மேற்கு சந்தவனம் சபாபதிப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடையவாதனம்; தெற்கு சுப்பையா கைம்பெண் ஆயிலியத்தின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவையடங்கலிற் சொரியலாய் 1/ 0 பங்கும்.

(2) டிை பிறை' திருவாதெணி" நி.பர. 18 3/8 எல்லை கிழக்கு கந்தையா கணபதிப்பிள்ளைக்குடையவாதனம். வடக்கு இராமலிங்கம் கந்தையாவின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். மேற்கு கந்தவனம் சபாபதிப்பிள்ளையின் உரிமைக்காரருடைய வாதனம் தெற்கு வெள்ளவாய்க்கால் இதடங்கலில் சொரியலாய் அறுபதிலைந்து (5/60) பங்கும்.

(3) கரணவாய் தெற்கு வத்தைக்குறிச்சியிறை சோலையன் தோட்டம் நி.பர. 2 1/2 எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு இராமலிங்கம்கந்தையாவின் உரிமைக்காரருக்குடைய வாதனம், மேற்கு சிதம்பரநாதர் வல்லிபுரத்தின் உரிமைக்காரருடைய வாதனம், தெற்கு வல்லிபுரநாதர் கந்தையாவுக்குடைய வாதனம். இதடங்கலில் சொரியலாய் ஐந்திலொரு பங்கும்.

(4) டிைபிறை 'திருவாதெணி' உலாந்தாமேஸ்தர் க. வேல்முருகு என்பவரால் 1960ஆம் வைகாசி 15திக 2740-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு பருத்தித்துறை மாவட்டநீதிமன்றத்தின் 1930 -ம் இலக்கப்பிரிவிடல் வழக்கின் கடைசித்தீர்வையோட்டிணைக்கப்பட்டிருக்கும் படத்தின் படி நி. பர. 24குளி 10 1/4 எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு வழிவாய்க்கால் மேற்கு குறித்தபடத்தில் கண்ட 13-ம் நம்பர் துண்டு தெற்கு குறித்த படத்தில் கண்ட 16-ம் நம்பர் துண்டு. இதடங்கலும்.

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு 2466/66 வும் மேலும் ரூபா 2000/= வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1978-ம ஆண்டு வைகாசி மாதம் 29-ந் திகதியிலிருந்து தீர்வை திகதியாகிய 1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 21-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீதவட்டியும் வழக்குச் செலவு - - - - - மேலதிகசெலவும கொடுக்கவேண்டியிருப்பதாலும, இதில் 23- 2- 79-ல் கொடுபட்ட ரூபா 2000/= கழித்து இருபட்டது' (செலவுப்பணம் நிாணயித்து அறிவிக்கப்படும்);

புலோலி மேற்கு, க. நா. சுப்பிரமணியம்,
புலோலி, காமிஷனரும், விலைமதிப்பாளரும்,
24 / J336 16-1-80

## ஞானப் பயிர்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

வேண்டும். "நான் ஆர்? என் உள்ளம் ஆர்? என்ற தத்துவசோதனையும் வேண்டும், பெரிய புராணத்தில் பேசப்படும் அடியார்கள் தன்னைத் தலை உணர்ந்து தாம் செய்வது எதிலும் திருவடி உணர்வும் ஓர் ஒப்பற்ற சிதானமும் உடையவர்களாய் வாழ்ந்து சிவகதி அடைந்தார்கள்.

தொடரும்

## பத்திரிகையாளர் சந்திப்பு

எதிர்வரும் 21.12.80 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் வட இலங்கைப் பத்திரிகையாளர் ஒன்றுகூடல் யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்ரியூட் மண்டபத்தில் நடைபெற உள்ளது. இலங்கை கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியம் நடாத்தும் இக் கூட்டத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்

## கலவானைத் தொகுதிக்குக் கடும் யோகம்

இரட்டையர்கள் உறுப்பினராய் இடம்பெறுவர்

வெள்ளி அல ; விசெலன்றும் குருசந்திரன் கூடினர் என்றும் யோகங்களை நாட்டு மக்கள் சொல்லிக் கொள்வர், ஏதாவது இருந்தாற் போல அதிட்ட இலாபம் கிட்டினால்.

கலவானைப் பாராளுமன்றத் தொகுதி இந்தக் குருசந்திர யோகத்தில் இப்பொழுதிருக்கின்றது.

இரட்டையர்கள் ஒற்றை உறுப்பினர் தொகுதிக்குப் பாராளுமன்றத்தில் இடம் தேடிக் கொண்டனர்.

நீங்கள் சொன்னதும் சரி நாங்கள் சொன்னதும்சரி என்று அங்கு கோகாமலும் இங்கு கோகாமலும் இருபகுதியினரையும் எடுத்தணைத்து உள்ளக் கொதிப்புக்கு எள்ளளவும் விடாமல் மாயக் கிருஷ்ணனின் மாயம்போன்று காரியத்தை முடித்துக்கொண்டது அரசாங்கம்;

உயர்நீதிமன்றம் உரைத்ததும் சரி; பாராளுமன்றம் பார்த்ததும் சரி. சபாநாயகர் ஆற்றியதுஞ் சரி. சனாதிபதி சாற்றியதும் சரி.

எல்லோரும் இன்புற்றிருப்பதிக்காலம்!

## National Life

(continued from page 4)

to avoid any element of compulsion in most matters at this stage of our national evolution. This arrangement for option could be tried for sometime, at least till the next Parliamentary General Election. Such a procedure will be in keeping with the ideals of Democracy and the real and permanent needs of the people and their welfare in the fullest manner.

It may be mentioned, when considering the use of languages, that English is not only very useful for Scientific, Commercial, Medical, Industrial and other material purposes. but also is of equally great benefit for religious and cultural purposes, and to facilitate international contacts in every direction which is an indispensable requisite for contemporary human existence,

It is further submitted that English could well be made one of the official languages of this country in a supplementary and complementary manner with many benificial results to the individual, to the nation and to the entire world community.

Such dual provision could jointly serve very well the cause of individual, national and world welfare to promote which we as individuals and as a country are morally and otherwise obliged,

## சிவதி புராணம்

[ பண்டிதர் வீ. க. வீரகத்தி அவர்கள் கந்தன் மேற் கவி பாடியது போன்று, சக்தி உபாசனையாக சிவதி புராணம் ஒன்று இயற்றி அன்னைக்கு அர்ச்சனை செய்கின்றார். ]

முன் வளர்ச்சி - 2

நூல்

அங்கயற் கண்ணி, அழகுதமிழ்க் கடலிலே
சங்கம் வைத்தன்று தமிழ்செய்த மீனாட்சி,
கலைநுட்பம் வானுயருங் காஞ்சியிலே ஞானக்
கதிகாட்டி விதிசெய்யும் கண்ணொளிக் காமாட்சி!
காசிக்குச் சென்றுகண் மூடுகின்ற யாருக்கும்
கூசாமல் முத்தி கொடுக்கும் விசாலாட்சி!
பிரபஞ்சம் எல்லாம் சமதர்ம ஆணைசெயும்
பெண்ணுள பெண்ணே! பெருமிகருணைப் பேராறே!
பேராத பச்சைவண்ணப் பெண்மைப் பெருஞ்சுடரே
கோழை களாய்விரகி குன்றினராய்ப் பாவம்
ஏழைகளின் வாயிலே மண்போடும் எத்தர்களை
எற்றிப் பந்தாடும் எதும்பொடியச் சாடும்
கொற்றவையே! காளிமா காளி! பராசக்தி!
எல்லோரும் இன்புற் றிருக்குநெறி வாராத
புல்லோர்கள் கண்டறியாப் புண்ணியப்பூங் கோவிலமே!
மோனமேனும் ஞான வரம்பிலுறை முத்தர்க்க
வான விளிம்பிலே வட்டமிடும் இச்சிலியே!

மன்னுயிரை நேசிக்கும் மாண்பு நெறிகாட்டும்
மாற்றுயருங் கல்விதரும் மாநோன் பனுட்டிக்கும்
ஏற்றமுறும் வெண்டா மரையிதழ வாணி!
தன்னுயிரை ஏழைகளுக் கர்ப்பணிக்கும் வீரத்
தியாகத்தை வல்லபத்தைத் தீரத்தை ஈந்தருளும்
தயாநிதியே சாமுண்டீ! தற்பரையே! துர்க்கையே!

மன்னுயிரைப் பேணும்பொன் மண்ணுறு பாவைற்றை
ஏமம் உறுகவென எல்லோர்க்கும் சகவெனச்
சேமம் பெறுகவெனச் செய்துவரும் செந்திருவே!

கோலம் பலவாய்க் குணம்பல வாகுலும்
மூலத்தில் ஒன்றான முன்னைப் பழம்பொருளே!
நவராத் திரியணங்கே! நர்சித் தண்சிவதி!
அபிராமி உன்றன் அழகு விழிகளிலே
ஆவி கரைவாரை அவையிருத்தும் அம்பிகையே!

கிடைத்தற் கரிய மனிதப் பெரும்பிறவி
எடுத்த பயனாக இன்பப் பணிபுரிந்து
அப்பாலே நின்னை அனுபவிக்கும் ஆனந்தக்
தப்பாத ஆன்ம விடுதலையாம் அத்துவித
ஆராத இன்பம் அருளுகின்ற ஆரமிழ்தே!
பேராத வாழ்வளிக்கும் பேசும்பொற் சித்திரமே!
அந்திப் பொழுதின் அகல்வானக் கோடியெல்லாம்
சிந்தை மயக்கேற்றுஞ் சித்திரத்தி லுள்மெழுகி
எண்ணற்ற கற்பனைகள் எல்லையிலாச் சித்திரங்கள்
கண்ணைப் பறிக்கும் கலைக்கோலம் எல்லாமே
எழுதி மெழுகி மெழிக்கோர்த்த பேரழகாய்
இதய வெளியோ டிணைந்தசையும் வான்வெளியில்
செந்திக் குழம்பிற் சேருடித் தனதனக்கும்
அந்திக் கதிரோன் அழகொழுகும் மேனியிலே
தெண்ணிலாக் கீற்றினிலே தேனருவி யூற்றினிலே

( வரும். )

## சிவோகம்பாவனை

தெய்வத்தை நம்பு — முழுமனதோடு நம்பு. இனிது எவற்றிலும் இனியதாக இறைவனை நினை. எல்லாமே அவன் என்றிரு. இருக்கும்போதும், நிற்கும்போதும், நடக்கும்போதும், கிடக்கும்போதும் — எந்நேரமும் நினை! உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலும் தெய்வ சாந்நித்தியம் தெரிவதாக! எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான், இறைவனை உனது உள்ளத்தில் வைப்பாயாக. எல்லாம் அவனுடைய செயலாகுக. சுற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

Hindu Organ

Friday, 19-12-80

## HUMAN RIGHTS — THE HIGHLIGHT OF RELIGION

Historical records testify to the appropriateness of the assumption that humans pay homage to one religion or the other, notwithstanding the claim that a substantial proportion of men and women has been classified as atheists.

Religion in its easily explained significance is simply a system of faith and worship, whatever contending religious faiths may establish as recognized definitions.

The greatness of the different exponents of religious denominations lies in the central fact of a common ground of observance. And that agreed requirement is the respect for rights.

Right is commonly something to which a person is entitled by virtue of reason. This idea is contained in what is called a privilege.

Now, is this precious possession exclusively for humans or are all beings entitled to enjoy it?

Religion cannot be anything but magnanimous and Just. Hence all beings are equal in the eyes of religion. Rights do exist for all beings and cannot be denied to some

The only difference is that while humans have the capacity to demand their rights, other beings not being possessed of the sixth sense have to enjoy rights and that only when allowed to be experienced.

Human Rights — Here is a picturesque phrase that has enabled all ambitious statesmen and prevaricating politicians keep themselves alive in the estimation of a gullible public.

Charters that have been internationally initiated at the plenary sessions of August Assemblies, all swear by these RIGHTS which to most of the people of this world are an imaginary legend.

In the context of the current sessions of the Seminar on 'Religions and Cultural Traditions in the Development of Human Rights in Sri Lanka' it will be useful to ponder over this feature not in the academic sense but with a view to g tting the people sincerely interested in it.

It will be admitted by all religious leaders that the so called Human Rights are axiomatic truths which need no commendation at any time. All that remains to be done is how these Rights can be brought within the range of practice. To enjoy a right, it must be made available to the person entitled to it. In other words all agencies that deter a person or group of persons from enjoying the Right must be identifi d and brought to book

Reflecting the religious tendencies of Hindus in general and Saivaites in particular, we feel it our religious duty to reiterate the time-honoured conception that animals have a right to live in this world in the same manner as human beings claim it.

Expanding on our submission, we make bold to say that slaughter of animals for providing food for human beings is certainly the deprivation of the right of animals to live. The killing of wild animals when such beings pose a threat to humans is permissible; but not otherwise.

In the matter of the slaughter of animals it has become almost a permissible sin and pardonable crime because religion has lost its hold on rulers of nations.

It may be that this view of ours would be extremely orthodox and hardly capable of being sustained in the normal course of life which by force of circumstances has become confused and confounded. However, we plead for Justice to the Animal Kingdom. Our pleadings are doubly urged: both for the dumb—driven brutes and for the humans who in utter selfishness commit the heinous crime of slaughter

It is to be hoped, that the Sri Lanka Foundation Human Rights Centre would in the course of the follow up of this Commendable Seminar, resolve on practical steps to reduce the incidence of killing whether it be homicide or slaughter of animals. In the name of all religions we make this suggestion.

# Saiva Siddhanta

## APHORISMS (Sri Lanka Tradition)

This is the first of the Saiva Renaissance Ser'es by Shri M. Gnanapragasam - It is being released by the Ramanathan Study Circle - Chunnakam)

1 பரமேஸ்வரன் எம்பொழுதும் சொரூபத்தில் நிஸ்கள ரூபியே.

1 The Supreme God Paramesbvara is always formless

"ஆரறிவார் அவர் பெற்றியே"?

2 அவருக்கு அபின்னமாயுள்ள பராசக்தியோ அப்படியல்ல. அவள் ஆனந்தரூபி திரோபவ ரூபியுமாம்.

2 Parasakti though blissful, yet she conceals her nature.

"பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே"

3 ஒருகால் அவளே சர்வாதிபதியுமாம்

3 She is the supreme ruler of the universe

"படைத்தளித் தழிப்ப மும்மூர்த்திக ளாயினை"

4 பராசக்திக்கு மாறாக நிற்பனபோல் நின்று தாம் வேறு என்ற விளம்பரத்தில் நிற்பன - உயிர்கள் எனப்படும் ஆன்மாக்கள்.

4 Souls stand separate, as if opposed to Her

"யோனிபேதம் நிரைசேரப் படைத்து அவற்றின்
உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்"

5 அவை அறியாமை என்னும் இருட்கடலுட் கிடந்து தத்தளிக்கும் பெற்றியன

5 They are immersed in ignorance and darkness

"மூலமாகிய மும்மலம் அறுக்கும் தூயமேனிச் சுடர்விடு சோதி"

6 குருதர்சனத்தால் மட்டுமே, அவை மேற்கதி வீடுபேறுகளை நாடும் பெற்றியன.

6 After Guru darshanam only they become true spiritual aspirants

"ஊன்பழித்து மண்புகுந்து-மனிதரை ஆட்கொண்ட வள்ளல்"

7 குரு கிருபா கடாக்ஷத்தால், பக்குவான் மாக்கள் முதற்கண் மாயா பந்தங்களைக் கழற்றிக் கொள்கின்றன

7 By his benovelent and gracious glance, there is cessation of maya bondage.

"சதுர் இழந்து அறிமால் கொண்டு"

8 பின்தொடர்ந்து நின்று திருவருள் கன்மநத்துவங்களையும். பந்தங்களையும் கழற்றிவிடுகின்றது.

8 Now, he is not bound by his karmas, (although he was bound by them formerly)

முடிகள் சாய்த்து அடிபேண வல்லார் தம்மேல்
செய்த்தெழும் வினைபோரமே"

9 அதிகாரசக்தியைக் கழற்றமுடியாத பக்குவான் மாவைம், பதித்துவம் பற்றிக்கொள்ளும்; அதனால், அவன் இவ்வுலகத்திலும். ஏனைய உலகங்களிலும் அரசனாகவோ, தலைவனாகவோ பணிபுரிந்து கொண்டிருப்பன்.

9 By the remaining trac s of his original mala, the partially freed soul attains the rulership of this world as well as the other worlds.

"மன்னனாக்கித் தரணி தானுள
வைத்தார் சாய்க்காடு மேவினாரே"

(continued in page 3)


# AUCTION SALE

UNREDEEMED JEWELLERY at R. Thuraiappah & Sons, Pawned from 17-7-77 to 6-5-79 will be sold by PUBLIC AUCTION at the said premises on 22-12-80 at 8-00 a. m.

Vidane Valavu,
Sithankerny,
27-11-80.

S.S. MARIMUTHU
Commissioner & Auctioneer


### Place of English in our National Life

*(By Sri S. Sivasubramaniam)*

There is a great deal of substance in the request for making English a medium of studies in Sri Lanka, re-introducing in a manner what was in vogue earlier. Trial has been given already to the system of having Sinhala and Tamil as media of Studies and the country has had sufficient experience of the results. It would be now reasonable, fair and practical, to give the people and the student population the alternative benefit of having at their option in the future, the opportunity of utilising any of the three languages, Sinhala, Tamil, and English as the medium of instruction. Nothing is lost by giving such an option. It cannot be denied that there is a feeling that English could be restored as a medium of instruction. It is harmless if people are given the option, without making any particular medium as such, compulsory for the entire scheme of studies in the curriculum. It is best as far as possible

(continued in page 3)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna (Telephone: 356) on Friday, 19-12-1980*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam

